RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s635

OPEN ACCESS

# கவிஞர் மீராவின் புதுக்கவிதைகளில் பண்பாட்டு மரபுகள்

வி. ரமேஷ் [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, பி.ஜி.பி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாமக்கல்-637207, தமிழ்நாடு, இந்தியா

# Cultural Traditions in Poet Meera's Free Verses

**V. Ramesh** [a, *]

[a] Department of Tamil, PGP College of Arts and Science, Namakkal- 637207, Tamil Nadu, India

* Corresponding Author: elangophd5@gmail.com

Received: 30-09-2021
Revised: 01-05-2022
Accepted: 18-05-2022
Published: 30-07-2022

**ABSTRACT**

Meera's poems are classical, verse, satire, poems, poets' forum, and short poems. He also made his mark in the world of journalism through "Annam Vidu Thoothu, Kavi, Om Shakthi, and Moota Magazine." He is the recipient of many distinguished awards. He is a professor, fighter, poet, essayist, journalist, publisher, printer, and founder of the press, who created various dimensions. In the Tamil literary tradition, free verse, a literary form, has been of great value and influence in the last century and the present century. There were many innovations and revolutions in the subject matter and the method of singing, and a number of new poems were created. Not only that, but free verses are also being created today about the cultural virtues, thoughts, human emotions, and humanities that should be possessed by man. In this way, this article explores the cultural norms of contemporary society found in the poems of Meera, who is the pioneer of new poetry.

**Keywords:** Meera Poems, Cultural Norms, Contemporary Society, Poet Meera

## முன்னுரை

தமிழ் கூறும் நல்லுலகில் 'மீரா' என்ற அழகிய ஈரெழுத்துப் புனைபெயரால் மதிப்போடும் அழைக்கப்படும் மீ.ராசேந்திரன் (1938-2002) எஸ்.மீனாட்சி சுந்தரம்-இலக்குமி அம்மாள் இணையருக்கு இரண்டாது மகனாக சிவகங்கையில் பிறந்தவர். கல்லூரிப் படிப்பை முடித்த பின் திராவிட இயக்கக் கொள்கைகளாலும் பொதுவுடைமைச் சிந்தனைகளாலும் ஈர்க்கப்பட்டவர். மீரா கவிதைகள் (மரபுகவிதைகள், கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் (வசன கவிதை), ஊசிகள் (அங்கத கவிதைகள்), மூன்றும் ஆறும்(கவியரங்கக் கவிதை), குக்கூ(குறுங்கவிதை) என கவிதைத் தளத்தில் முத்தரைப் பதித்தவர். அன்னம் விடு தூது, கவி, ஓம் சக்தி, மூட்டா இதழ் ஆகியவற்றின் வாயிலாக இதழியல் உலகிலும் முத்திரை பதித்தவர். சிறப்பு மிக்க பல விருதுகளைப் பெற்றவர். பேராசிரியர், போராளி, கவிஞர், கட்டுரை ஆசிரியர், இதழாளர், பதிப்பாளர், அச்சக நிறுவனர் என்றாற் போல் பல்வேறு பரிமாணங்கள் படைத்தவர். தமிழ் இலக்கிய மரபில் புதுக்கவிதை என்னும் இலக்கிய வடிவம், சென்ற நூற்றாண்டிலும் நிகழ் நூற்றாண்டிலும் மிகுந்த மதிப்புடனும், செல்வாக்குடனும் திகழ்ந்து வருகிறது. பாடுபொருளிலும் பாடுமுறையிலும் புதுமைகளும், புரட்சிகளும் பொலிய, புதுக்கவிதைகள் பல படைக்கப்பட்டன. அவை மட்டுமல்லாது, மனிதனிடம் இருக்க வேண்டிய பண்பாட்டு நற்குணங்கள், சிந்தனைகள், மனித உணர்வுகள், மனிதநேயங்கள் குறித்தும் புதுக்கவிதைகள், இன்றுவரைப் படைக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில், புதுக்கவிதையின் முன்னோடியாக விளங்கும் மீராவின் கவிதைகளில் காணப்படும் சமகால சமூகத்தின் பண்பாட்டு வழக்கலாறுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## புதுக்கவிதை

புதுக்கவிதை பற்றி பலர் பலவிதமான பொருள் கூறுகின்றனர். அவற்றுள் எஸ்ரா பவுண்ட் கூறும் புதுக்கவிதைக்கான இலக்கணமாவது,

- எடுத்துக் கொண்டப்பொருளைச் சுற்றி வளைக்காது நேராக அணுகுதல்
- தேவையற்ற ஒரு சொல் கூட வராதிருத்தல்
- கடினயாப்பை நீக்கி இசையின் எளிமையைப் போற்றுதல்”

என்று விளக்கம் தருகிறார் (Arengarasu, 1991). புதுக்கவிதையின் நோக்கம், அழகுணர்ச்சியைக் காட்டிலும், பொருள் புலப்பாட்டினை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்பதாகும். அதாவது, இயற்கையின் எழிலைப் பாடுவதைக் காட்டிலும், இதயத்தில் உருவாகும் உணர்வின் நெகிழ்ச்சிகளைப் வெளிப்படையாகப் பாடுவதைக் குறிக்கிறது.

## பண்பாடு-வரையறை

“பண்பாடு மனிதனுடைய வாழ்நிலைகளில் சாராம்சமாக காணப்படுகின்றன. மனிதனுடைய ஒழுகலாறுகள், நடத்தைகள், நம்பிக்கைகள், விழுமியங்கள், சுற்றி இருப்பவை பற்றிய உணர்வு நிலைகள் முதலியவற்றை குறிப்பது பண்பாடு என்கின்றர்” (Meenakshisundaram, 2012).

பண்படுவது பண்பாடு ஆகும். பண்படுதல் என்பது சீர்படுதல் எனவும், பண்படுத்தல் என்பது சீர்ப்படுத்தல் எனவும் பொருள்படும். நிலத்தை விவசாயத்திற்கு ஏற்றவாறு செப்பம் செய்வது பண்படுத்தல் எனப்படும். நிலத்தை உழுது பண்படுத்தி விளைவதற்கு ஏற்றவாறு சீர்படுத்துவது போல இனத்தையும் மனத்தையும் பண்படுத்துவது பண்பாடு என்பர்”. இதனையே,

"மெய்ம்மையாம் உழவைச் செய்து

விருப்பெனும் வித்தை வித்திப்

பொய்ம்மையாம் களையை வாங்கிப்

பொறையெனும் நீரைப் பாய்ச்சித்

தம்மையும் நோக்கிக் கண்டு

தகவெனும் வேலி யிட்டுச்

செம்மையுள் நிற்ப ராகில்

சிவகதி விளையு மன்றே”

என்று அப்பரும் குறிப்பிடுவர் (Thirunavukkarasar, 2014).

மேலும்,

“ஒரு சமுதாயத்தின் மக்கள் வாழ்க்கை நடத்தும் நெறிமுறைப் பற்றியதே பண்பாடு ஆகும்” என்று கார்லைஸ் என்று அறிஞரும் குறிப்பிடுவது நோக்கத்தக்கது (Ramachandran, 1990). கவிஞர் மீரா தனது கவிதைகளில் மனித வாழ்வை பதிவு செய்திருப்பது இங்கு நோக்கத்தக்கது.

## அன்னையின் அன்பு

‘அம்மா’ என்றால் அன்பு என்னும் வரியினை, கவிஞர் மெய்ப்பித்துக் காட்டியுள்ளார். மார்கழிப் பெருமை என்னும் கவிதையில் தெருவினை சுத்தப்படுத்துபவனுக்கு மழையென்ன, குளிரென எல்லாமே ஒன்றுதான். அவனுக்கு ஒடுங்க இடம் கிடையாது. குளிரெனில், போர்த்திக் கொள்ள கம்பளி கிடையாது. இந்நிலையினை கவிஞர் தன் கவி வரிகளில் உருக்கம் பொங்கக் கூறியுள்ளார்.

“மார்கழிப் பெருமையில் தோட்டிக்குத் தாவாரமுண்டா?

தெருக்கூட்டிக்குக் கம்பளி உண்டா?" (Kavignar Meera, 2001)

மேலும், அன்னையின் அன்பை,

"மார்கழித் குளிரில் ஓர் குழந்தைக் கிடக்குது

பக்கத்தில் நாயொன்றுபால் கொடுக்குது

ஒருபத்தைப் புல்லேமெத்தையாய் விட்டது

விசும்பி உதைத்தாலும் வானம் விழாது

அன்னையை நினைத்துக் குழந்தை அலறுது

கூடவெ நாயும் குரலோசை காட்டுது

ஈனத் தொழில் செய்யும் தோட்டச்சி ஒருத்தி

கூடையைக் கைவிட்டு குழந்தையைத் தூக்குகிறாள்

அன்னையின் மார்பில் அலறல் ஒடுங்குகிறது"

எனும் கவிதையில், குழந்தை வேறொருவருடையது என்று அறிந்தும் குழந்தையின் அழுகுரலைக் கேட்டுத் தாங்காது, தன் தொழிலையும் விடுத்து குழந்தையிடம் அன்புக் காட்டும் அன்னையின் அன்பை, கவிஞர் சுட்டிக்காட்டியுள்ளார் (Kavignar Meera, 2001).

## சிறு உயிர்களிடத்து இரக்கம் காட்டுதல்

'மீரா தன்னுடைய எமனுக்கு அழைப்பா?' என்னும் கவிதையில் வெப்பத்தின் காரணமாக வருணனை வேண்டுகிறான் மனிதன். வருணனும், அவன் வேண்டுகோளுக்கு இணங்கி தன் கருணையைப் பொழிகிறான். இதனால், அறையில் மழையின் காரணமாக எறும்புகள், பாச்சைகள், பல்லிகள், ஈசல்கள் போன்றவை தஞ்சம் அடைகின்றன. அவை, ஒன்றையொன்று தனக்கு இரையாக்கிக் கொள்கின்றன. இதனைப் பார்த்த, அவன் நெஞ்சில் முள் குத்தியது. துன்ப பொருட்டே, இத்தகு நிகழ்வு நடந்தது என்று வேதனையுறுகிறான். வெப்பத்தால் மழையை வேண்டினேன். அது, இவ்வுயிர்கள் அழிவதற்குக் காரணமாகி விட்டதே என்று துன்பம் கொள்ளுகிறான்.

"பதுக்கியபல்லிகள்

ஈசல்மேல் பாய்ந்தன

சித்தத்தில் தூண்டில் முள்

இன்பத்தை நாடினால்

துன்பத்தின் அழைப்பா?"

என்னும் இவ்வரிகள் மூலம் ஐந்தறிவு உயிர், ஆறறிவு உயிர் என்ற பாகுபாடின்றி அனைத்து உயிர்கள் மீதும், இரக்கம் காட்டும் மனிதநேயப் பண்பு புலப்படுகிறது (Kavignar Meera, 2001).

## சாகுருவியின் பாடு

குருவி என்றால் கூவும். பொதுவாக சாகுருவி கூவினால் இறப்பு நிகழும் என்பது ஐதீகம். அவ்வகையில், சாகுருவி இயல்பாகக் கூவுகிறது. அவ்வூரில் இறப்பு நிகழ்கிறது. இதுவும் இயல்பான ஒன்றே. ஆனால், மக்கள் சாகுருவி கூவியதால்தான் இறப்பு நிகழ்கிறது என்றும் கருதுகின்றனர். இதனால், அக்குருவியை மக்கள் எமன் கையில் ஒப்படைத்தனர். பாவம், குருவி இறந்த பின்னும் இறப்பு நிகழ்கிறது.

"சாகுருவி சபித்துச் சபித்து

ஊர் முழுவதும் நாசமாச்சு

சாகுருவி மாளவேண்டும்

கிராமம் மீளத் தழைக்கவேண்டும்

அரிசி காசு தாண்டிவந்து

எமனின் தோல்வி முழக்கினர்

பின்னும் பாசம் விழுந்தது

பின்னும் மனிதர் இறந்தனர்

சாகுருவிசெத்துப் போயும்

சாவுநித்தியம் வாழ்ந்தது"

மனிதரின் இறப்புப் பற்றியக் கருத்து தவறானது. எனினும், சாகுருவி மனிதரின் நலன் கருதி தன் உயிரையே அர்ப்பணித்தது. இதில், சாகுருவியின் மனிதநேயத்தை கவிஞர் மீரா வெளிக்காட்டியுள்ளார் (Kavignar Meera, 2001).

இன்றைய காலச் சூழல் மாற்றத்தால், ஒருவருக்கொருவர் உதவுவதும், அன்பு காட்டுவதும் குறைந்துக் கொண்டு வருகின்றது. பக்கத்து வீட்டில் வசிப்பவர் யார் என்பதைக் கூடத் தெரியாக, அவல வாழ்க்கையை, மக்கள் வாழ்ந்து வருகின்றனர். மனிதநேயம் என்பது குறைந்து வரும் சூழலில், மீராவின் இக்கவிதைகளில் மனிதநேயம் உயிரோடு இருப்பதைக் காணமுடிகிறது. மனிதர்களிடம் மட்டுமல்ல. அனைத்து உயிர்களிடமும் மனிதநேயம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறது என்பதையும் கவிஞர் எளிமையாக விளக்கியுள்ளார்.

## நம்பிக்கை

வாழ்க்கை என்பது இன்பமும், துன்பமும் இணைந்த தொடர் பயணம். மாண்புடைய மனிதப் பிறவியைச் சோர்வுடன் கழிக்காமல், நம்பிக்கை என்ற ஊன்றுகோலுடன் துன்பங்களை எதிர்கொள்ள முயல வேண்டும். மனிதனைப் பண்படுத்துவது தோல்விதான் என்பதை,

"தோல்வியே, நீ பரிணாமச் சிற்பி

மனிதனைச் செதுக்குவது

நீயல்லவா?

தோல்வியே

நீ சுட்டுத் தொலைத்ததால் அல்லவா?

நான் புல்லாங்குழல் ஆனேன்"

என்ற அடிகள் தெளிவுறுத்துகின்றன (Kavignar Meera, 2001). வாழ்வில் ஏற்படும் காயங்கள் தான் வாழ்க்கை அணிவிக்கும் 'பதக்கங்கள்' எனக் கவிஞர் குறிப்பிடுகின்றார்.

## இந்தியன் என்ற உணர்வு

மனிதநேயத்தை மறந்து மதத்தின் பெயரால் துயர் விளைவிக்கும் இழிநிலை தொடக்கக் காலம் முதல் 21 ஆம் நூற்றாண்டுவரை தொடர்கிறது. மதத்தின் பெயரால் மக்களுக்கு இடையில் வேற்றுமை வளர்க்கப்படுவதைக் கண்டித்துள்ளார். சாதிக்கொடுமை தலை விரித்தாடும் இச்சமுதாயத்தை,

"சாதியே நீ

தமிழ் ரத்தத்தோடு

கலந்து விட்ட

செம்புலப் பெயல்நீர்"

என எள்ளி நகையாடுகிறார் (Kavignar Meera, 2001).

எல்லா மதங்களும் அன்பையும் அருளையும்தானே போதிக்கின்றன. எந்த மதமாவது இன்புற்று வாழ்வதைவிட்டுத் துன்புற்று வாழும்படி கூறியுள்ளதா? பின் மதத்தின் பெயரால் கலவரம் ஏன்? இக்கருத்தை மையமாக வைத்து கவிஞர்,

"எல்லோரும் மக்களேயாவர் இங்கு

எல்லோரும் நிகராவர் எல்லோரும் உறவோர்

எல்லோரும் ஒருதாயின் செல்வம் - இதை

எண்ணாத மக்களை மாக்கள் என்போமோ"

என்கிறார் (Kavignar Meera, 2001). மதத்தின் பெயரால் அழிவு செய்தலைவிட்டு, இன்ப நல் வாழ்வை அன்பால் வளர்த்திட வேண்டும். இந்து, முஸ்லிம், கிறித்துவன் என்பதைவிட 'இந்தியன்' என்பதில் நாம் பெருமிதம் கொள்ள வேண்டுவதே பண்பாடு எனக் குறிப்பிட வேண்டும்.

## மகிழ்ச்சி

வாழ்க்கையில் மனிதனின் குறிக்கோளே மகிழ்ச்சியாக இருப்பது தான். அதற்காகத்தான் அவன் பல வழிகளைக் கண்டுபிடித்து அந்த மகிழ்ச்சி என்னும் இலக்கை அடைய எத்தனிக்கிறான். ஆனால், மனிதன் இலட்சியங்களை அடையும் பொருட்டு, அடைப்பு குறிக்குள் அடைக்கப்பட்டவர்கள்போல் உள்ளதை,

"நமக்கிருப்பதுபோல்

மேகங்களுக்குள் பாதைகளும்

பயண லட்சியங்களும் இல்லை

ஆனால்

மேகங்களின் ஆனந்தம்

நம்மிடம் இல்லை

நமக்கிருப்பதுபோல்

மலர்களுக்கு அரசியல் இல்லை

ஆனால்

மலர்களின் கொண்டாட்டம்

நம்மிடமில்லை"

என்கிறார் கவிஞர் (Kavignar Meera, 2001). மேற்கண்ட கவிதையில் மேகங்களுக்கும் மண்களுக்கும் எந்த ஒரு இலட்சியமும் இல்லாவிட்டாலும்கூட, அவை மகிழ்ச்சியாய் இருக்கின்றன. ஆனால், மகிழ்ச்சியோடும் இலட்சியங்களோடும் வாழக்கற்றுக்கொண்ட மனிதர்களோ, பற்பல தேவையற்ற எண்ணங்களாலும், செயல்களாலும் தன் மகிழ்ச்சியை தொலைத்து விடுகிறான்.

## குறிக்கோள்

ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் வெற்றிபெற வேண்டுமானால் முதலில் தனக்கென ஒரு குறிக்கோளை வகுத்துக்கொண்டு அதை அடைவதையே திண்ணமாகக் கொள்ள வேண்டும் என்பதை கவிஞர் மீரா தமது கவிதையில்,

"நீரைப்போல்

எங்கே சுற்றி அலைந்தாலும்

உன்மூல சமுத்திரத்தை

அடைவதையே

குறிக்கோளாய்க் கொள்வாயாக"

என்று குறிப்பிடுகிறார் (Kavignar Meera, 2001).

## அறம் வழி நடத்தல்

மனிதன் அறவழியில் நடக்காமல், சுயநலத்திறாக மிருகத் தன்மையோடு செயல்படுவதை,

"சுயநலம் என்பது

சுய இன்பம் போன்றது

அருவருப்பானது என்பதை

நீ அறிந்துகொள்ளமாட்டாயோ?

என்றும், மனிதன் மிருகமானதை

நீ காட்டில்

மனிதனாக இருந்தாய்

நாமோ நாட்டில்

மிருகங்களாய் இருக்கிறோம்"

மேற்கண்ட கவிதை வரிகள் மனிதர்கள் சுயநலத்திற்காக, அறத்தை விற்காமல், அநீதிக்கு துணையாக இல்லாமல், நல்லோரைப் பகையாமலும், தீயோருடன் ஒத்துப்போகாமலும், உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுவோரிடம் உறவு வைக்காமலும் நேர்வழியில் சென்று அறத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதை உணர்த்துகிறது (Kavignar Meera, 2001).

## நிலையாமை என்ற உணர்வு

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்

பெருமை உடைத்து இவ்வுலகு"

நேற்றிருந்த ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமையைப் பெருமையாகக் கொண்டது (Sundramurthy, 1971). இந்த உலகம் என்ற வள்ளுவரின் கூற்றினை அடியொற்றி,

"சிலநாளே உலகமென முடிவு செய்தால்

சிரம் நடுங்கும் கவலையெல்லாம் ஓடிப்போகும்

சிலநாளே மகிழ்ச்சியென எண்ணிப் பார்த்தால்

தீமைகளைச் செய்வதற்கே மறந்து போகும்

செத்தவரில் உலகத்தைத் திருடிக் கொண்டு

சென்றவர்கள் எவருமில்லை"

என்கிறார் (Kavignar Meera, 2001). வாழ்க்கையின் நிலையை நன்குணர்ந்து கூறும் கவிஞர் ஒவ்வொரு மனிதனும் இந்நிலையாமையை புரிந்துக்கொண்டு சகமனிதர்களுடன், சண்டை, சச்சரவு இன்றி, விருப்பு, வெறுப்பின்றி எவருக்கும் இன்னல்கள் விளைவிக்காமல், நிலையில்லா உலகத்தில் நம்மால் முடிந்த நன்மைகளைக் செய்து, வீடுபேறு அடைந்தால் மனிதனாகப் பிறந்ததற்கு அர்த்தமுண்டு என்பதை அறிய முடிகிறது.

## முடிவுரை

எடுத்துக் கொண்டப்பொருளைச் சுற்றி வளைக்காது நேராக அணுகுவதே புதுக்கவிதை ஆகும். ஒரு சமுதாயத்தின் மக்கள் வாழ்க்கை நடத்தும் நெறிமுறைப் பற்றியதே பண்பாடு ஆகும். 'அம்மா' என்றால் அன்பு ஆகும். காலச் சூழல் மாற்றத்தால், ஒருவருக்கொருவர் உதவுவதும், அன்பு காட்டுவதும் குறைந்துக் கொண்டு வருகின்றது. ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் வெற்றிபெற வேண்டுமானால் முதலில் தனக்கென ஒரு குறிக்கோளை வகுத்துக்கொள்ள வேண்டும். இந்து, முஸ்லிம், கிறித்துவன் என்பதைவிட 'இந்தியன்' என்பதில் நாம் பெருமிதம் கொள்ள வேண்டுவதே பண்பாடு. மனிதர்கள் சுயநலத்திற்காக, அறத்தை விற்காமல், அநீதிக்கு துணையாக இல்லாமல், நல்லோரைப் பகையாமலும், தீயோருடன் ஒத்துப்போகாமலும், உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுவோரிடம் உறவு வைக்காமலும் நேர்வழியில் சென்று அறத்தைக் காப்பாற்ற வேண்டும். மனிதர்கள் சுயநலத்திற்காக, அறத்தை விற்காமல், அநீதிக்கு துணையாக இல்லாமல், நல்லோரைப் பகையாமலும், தீயோருடன் ஒத்துப்போகாமலும், உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுவோரிடம் உறவு வைக்காமலும் நேர்வழியில் சென்று அறத்தைக் காப்பாற்ற வேண்டும்.

## References


Appadurai, K. (2011) Kalaiyum Thenmozhi, Malar Nilaiyam, Chennai, India.

Arengarasu, S. (1991) Tamil Puthukavithai - Oru Thiranaivu, Ulagapathippagam, Chennai, India.

Kavignar Meera, (2001 Meera kavithaikal, Annam Veeliyeedu, Thanjavur, India.

Kavignar Meera, (2001) Amithathuligal, Annam Veeliyeedu, Thanjavur, India.

Meenakshisundaram, T. P. (2012) Tamilum Pira Panpaadum, Naam Tamilar Pathippagam, Chennai, India.

Ramachandran, (1990) Walt Whitman tamil kavinargalum, Narmatha Pathippagam, Chennai, India.

Sundramurthy, E. (1971) Thirukkural aaninalam, Madras University, Chennai, India.

Thirunavukkarasar, (2014) Appar Thevaram, New Century Book House, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License